Rt Hon Dominic Raab MP

House of Commons

London

SW1A 0AA

Tuesday 18th May 2021

*தமிழ் இன அழிப்பு நினைவு தினம்*

*மதிப்புக்குரிய திரு* Dominic Raab *அவர்களுக்கு,*

*முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நடந்து பன்னிரண்டு ஆண்டுகள் ஆகின்றன. சிறீலங்கா இராணுவத்தால் தமிழர்கள் கொத்து கொத்தாக கொலை செய்யப்பட்டு ஆண்டுகள் பன்னிரண்டு. ஆனால் இந்த இனப்படுகொலையை நடாத்தியவர்கள் எவ்வித தண்டனைகளும் இல்லாமல் நடமாடுகின்றனர். சிறீலங்கா இராணுவத்தின் தாக்குதல்கள்* 2009 *ஆம் ஆண்டு மே மாதம் உச்சத்தை எட்டியது. தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலையைத் தடுக்க சர்வதேச அமைப்புகளும் நிறுவனங்களும் தோல்வியுற்றதன் விளைவாக* 21 *ஆம் நூற்றாண்டின் மிகக் கொடூரமான இனப்படுகொலைகளில் இதுவும் ஒன்றாகும். மே* 2009 *இல் மட்டும், பல்லாயிரக்கணக்கான ஈழத் தமிழர்கள் தங்கள் உயிர்களை இழந்தனர், மேலும் எண்ணற்ற மற்றவர்கள் பலத்த காயமடைந்தனர். மேலும், தமிழர் தாயகத்திலிருந்து இயங்கும் நம்பகமான அடிமட்ட சிவில் அமைப்புகளின் தகவல் படிஓ* 146, 679 *கணக்கிடப்படாமல் உள்ளனர். அவர்கள் இறந்துவிட்டனர் என கருதப்படுகின்றது.*

2009 *ல் தமிழ் இனப்படுகொலையின் உச்சத்தின் போது, தமிழ் பொதுமக்கள் தஞ்சம் அடைவதற்கு* “no fire zone” *ஒதுக்கப்பட்டது. சிறீலங்கா இராணுவத்தினர் இந்த இடங்களுக்கு தமிழ் மக்களை வரவழைத்து அவ்விடங்களுக்கு தொடர்ந்து தாக்குதல்கள் நடாத்தினர். . இலங்கை இராணுவம தற்காலிக மருத்துவமனைகளைத் தொடர்ந்து தாக்கி, பலரைக் கொன்றது, காயப்படுத்தியத. தமிழ் பொதுமக்களுக்கு மருத்துவ பொருட்கள் மற்றும் குழந்தைகளுக்கான பால்மா போன்ற அத்தியாவசிய உணவுகள் மறுக்கப்பட்டன, இதனால் அவர்கள் ஊட்டச்சத்து குறைபாட்டால் இறக்க நேரிட்டது. இந்த தாக்குதல்களின் விளைவாக* 70,000 *க்கும் மேற்பட்ட தமிழ் பொதுமக்கள் கொல்லப்பட்டு இருக்கலாம் என ஐக்கிய நாடுகள் சபை மதிப்பீடு செய்துள்ளது.*

*இனப்படுகொலை சட்டம் "மீண்டும் ஒருபோதும் இல்லை" என்ற சர்வதேச சமூகத்தின் உறுதிப்பாட்டைக் குறிக்கிறது மற்றும் சர்வதேச மட்டங்களில் பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட "இனப்படுகொலை" என்பதற்கான முதல் சர்வதேச சட்ட வரையறையை வழங்குகிறது. அவ்வாறு இனப்படுகொலைகள் நடாத்தப்பட்டால் அந்த*

*குற்றங்களை சுட்டிக்காட்டி தண்டனைகள் வழங்கவேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். தமிழ் இனப்படுகொலையின் குற்றவாளிகளை பொறுப்புக்கூற வைத்து தமிழ் தேசத்திற்கு நீதி வழங்குவது சர்வதேச சமூகத்தின் பொறுப்பாகும். இன்றுவரை, தமிழ் இனப்படுகொலையின் ஒரு குற்றவாளி கூட தண்டிக்கப்படவில்லை. பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான நீதி தொடர்ந்து மழுப்பலாக உள்ளது.*

*இன்றும் இலங்கை அரசாங்கம் தமிழர்களின் மீதான இனவழிப்பை கலாச்சார சீரழிவு மூலம் நிகழ்த்திக் கொண்டிருக்கின்றது. தமிழர்களின் மொழி, பண்பாடு, வரலாறு, பொருளாதாரம் போன்றவற்றை அழிக்க முயல்கின்றது. உதாரணமாக சமீபத்தில்*

யாழ்ப்பாண பல்கலைகழக வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்து முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவு சின்னத்தை அழித்தார்கள். சமாதானத்திற்காவும் நீதிக்காகவும் இன்றும் தமிழ்த் தேசம் காத்துக்கிடக்கின்றது.

தமிழர் தேசத்தில் அவர்களின் அடிப்படை மனித உரிமை, மாண்டவர்களை நினைவு கூறும் உரிமை ஆகியவற்றை சிங்கள பேரினவாத அரசு தொடர்ந்து மறுத்து வருகின்றது. முதலில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இருந்த முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவுச்சின்னம் அழிக்கப்பட்டது, கடந்த வாரம் முள்ளிவாய்க்கால் மண்ணில் வைக்கப்பட்டிருந்த பொது நினைவுச்சின்னம் அழிக்கப்பட்டது. இனப்படுகொலை செய்யப்பட்ட அப்பாவி பொதுமக்களின் நினைவுச்சின்னத்தினை கூட விட்டுவைக்காமல் அவர்களை நினைவு கூறுவதையும் அடக்கி ஒடுக்குவது என்பது சிறிலங்கா அரசு தமிழ் இனப்படுகொலையை மூடிமறைக்க தொடர்ச்சியான முயற்சியினை எடுத்து வருவதினை காட்டுகின்றது.

உலகளாவில் தமிழர்களால் “இனப்படுகொலை தினம்” ஆக அங்கீகரிக்கப்பட்ட மே 18 ஆம் திகதி பன்னிரண்டாம் ஆண்டு நினைவு நாளாகும். இந்த நாளில் தமிழ் இனப்படுகொலைக்கு நீதி தேட பிரித்தானிய அரசாங்கத்திடம் பின்வரும் கோரிக்கைகளை விடுக்கின்றோம்;

1. இன்றும் இலங்கை அரசாங்கத்தால் தமிழருக்கு எதிராக நடாத்தப்படும் செயல்களை இனவழிப்பு என இனங்காணப்பட வேண்டும்.
2. இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் முன் நிறுத்த பரிந்துரை செய்ய வேண்டும் அல்லது இலங்கை அரசாங்கத்தின் மீது சுமத்தப்பட்ட போர்க்குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டுகளை விசாரிக்க ஒரு தற்காலிக தீர்ப்பாயத்தை உருவாக்க வேண்டும்.
3. தமிழ் தேசத்தின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் அவர்களின் நியாயமான அபிலாசைகளை நிவர்த்தி செய்யும் ஒரு அரசியல் தீர்வை ஆதரிக்க வேண்டும்.

தமிழ் இனப்படுகொலையால் பாதிக்கப்பட்டவர்களின் துன்பங்களை நினைவில் வைத்துக் கொள்வதன் மூலமும், அவர்களுக்கு நீதி மழுப்பலாக இருந்திருப்பதை ஒப்புக்கொள்வதன் மூலமும், நம் வார்த்தைகளால் மட்டுமல்லாமல் நமது செயல்களினாலும் நினைவுகூருவோம்.

என்றும்
உண்மையுள்ள,
தமிழ் இளையோர அமைப்பு - பிரித்தானியா

| | | |
|---|---|---|
| Aston Tamil Society | Birmingham Tamil Society | Brunel Tamil Society |
| Cambridge Tamil Society | City Tamil Society | Coventry Tamil Society |
| Essex Tamil Society | Hertfordshire Tamil Society | Keele Tamil Society |

Kings' College London Tamil Society

Leicester Tamil Society

Liverpool Tamil Society

London School of Economics Tamil Society

Loughborough Tamil Society

Nottingham Tamil Society

Queen Mary Tamil Society

Royal Holloway Tamil Society

Southampton Tamil Society

Surrey Tamil Society

Sussex Tamil Society

Tamil Student Initiative

University of East Anglia Tamil Society

Warwick Tamil Society

York Tamil Society